23rd September 1961]

இருக்கின்றவர்களை சீசன் தொழிலாளர்கள் என்று வேலையிலிருந்து நீக்கிவிட்டு புதிதாக தொழிலாளர்களை எடுக்கிறார்கள். ஆகவே இவ்வாறு வருடம் பூராவும் வேலை செய்கின்ற தொழிலாளர்களை நிரந்தரமாக்கி அவர்களுக்கு சட்டப்படியுள்ள கூலியை நிர்ணயம் செய்ய உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது வேறு பிரச்னை, இதற்கு தனியாக கேள்வி போட வேண்டும்.

Factories—Proto—type

*1757 Q—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் புரோடோடைப் தொழிற்சாலை ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால், எங்கெங்கே ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A proposal is reported to be under consideration of the Government of India.

SRI S. M. ANNAMALAI : இது தனியார் துறையில் ஆரம்பிக்கப் படுமா, அல்லது பொதுத் துறையில் ஆரம்பிக்கப்படுமா ? பொதுத் துறையில் என்றால், இதற்கு எவ்வளவு ரூபாய் செலவாகும், இதில் ஏற்படும் செலவை மத்திய சர்க்கார் ஏதேனும் ஏற்றிருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM ; இது பொதுத் துறையில் ஆரம்பிக்கப்படும். பிரஞ்சு அரசாங்கத்தின் ஒத்துழைப்போடு இது நிறை வேற்றப்படும்.

Power-looms

* 1758 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether power-looms are to be licensed in the State;

(*b*) if so, how many are to be permitted during 1961–62; and

(*c*) whether the Government have examined how far the introduction of power-looms would affect the hand-loom industry?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) It is proposed to introduce 2,500 power-loom in weavers' co-operative societies during the Third Five-Year Plan period. The number of power-looms to be installed during 1961–62 has not yet been decided; and

(*c*) Yes, Sir.

SRI M. KALYANASUNDARAM : கனம் அமைச்சர் அவர்கள் மூன்றாவது உப கேள்விக்கு சொன்ன பதிலில் ஆம் என்று சொன்னார் கள். இந்த விசைத்தறிகளை நம்முடைய ராஜ்யத்தில் அதிகமாக அனு மதிப்பதினால் ஏற்கனவே இருக்கக் கூடிய கைத்தறிகளுக்கு பாதகம் ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்கள் உணருகிறார்களா ?

THR HON. SRI V. RAMAIAH : இது ஒரு நீண்டகால பிரச்னை. இதைப்பற்றி ராஜ்யத்திலுள்ள எல்லா ஸ்தாபனங்களிடமும் கலந்து ஆலோசித்து பரிசீலனை செய்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத் தில் 2,500 விசைத்தறிகளுக்கு அனுமதி கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

[23rd September 1961

Sri A. MARIAPPAN : தமிழ் நாட்டில் பல கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் விசைத்தறிகள் கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பத் திருக்கிறார்களே அவர்களுக்கு அவை எப்போது கொடுக்கப்படும் ?

The Hon. Sri V. RAMAIAH : விசைத்தறிகள் தரவேண்டும் என்று இதைப்பற்றி முடிவு செய்கின்ற நேரத்தில் கூட்டுறவு சங்கங்கள் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டன. அதன்படிதான் இவ்விதம் 2,500 விசைத் தறிகள் ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்குவது என்று தீர்மானிக்கப் பட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் திட்டமிட்டபடி எல்லா உதவிகளையும் சர்க்கார் செய்து கொடுக்கும்.

Sri M. KALYANASUNDARAM ; விசைத்தறிகள் வேண்டும் என்று கேட்ட கூட்டுறவு சங்கங்களைவிட இதை அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்ட கூட்டுறவு சங்கங்கள் அதிகம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

The Hon. Sri V. RAMAIAH : அத்தகைய தகவல் என்னிடமில்லை.

Sri K. R. NALLASIVAM : இத்தகைய விசைத்தறிகள் நடத்த தனிப்பட்ட நபர்களுக்கும் அனுமதி வழங்கப்படுமா ? அல்லது கூட்டுறவு சங் கங்களுக்குத்தான் வழங்கப்படுமா ? கூட்டுறவு சங்கங்களுக்குத்தான் என்றால் பத்து பேர் சேர்ந்து ஒரு கூட்டுறவு சங்கம் அமைத்து இதற்கு அனுமதி வேண்டும் என்று கேட்டால் அதற்கும் அனுமதி கொடுக்கப்படுமா ?

The Hon. Sri V. RAMAIAH : நான் கொடுத்த பதிலில் சொஸைட்டி களுக்குத்தான் கொடுக்கப்படும் என்று கூறியிருக்கிறேன்.

Sri N. R. THIAGARAJAN : தலைவர் அவர்களே, கைத்தறி தொழி லாளர்களுக்கு விசைத்தறிகளால் ஏற்படும் பாதகத்தைக் காட்டிலும், கைத் தறித்துணிகளையே கட்டாமல், பக்கிங்காம் அண்டு கர்நாடிக் மில் துணிகளை உடுத்திக்கொண்டு கைத்தறித் தொழிலாளர்களுக்குக்காக கண்ணீர் விடும் சிலரால் அதிகமாக பாதகம் ஏற்படுகிறது என்பதைப்பற்றி அரசாங்கம் ஆராய்ச்சி செய்ததா ?

(பதில் இல்லை).

Sri K. VINAYAKAM : Sir, in the interest of the handloom industry in our State, was it not the policy of the Government to safeguard it by not resorting to power-looms in our State. What are the extraneous reasons that now weighed with the Government for having given a go-by to this policy and then trying to introduce power-looms in our State?

The Hon. Sri V. RAMAIAH : There are no extraneous reasons as such. When we took decision early in 1956 not to have power-looms in our State, we did it on account of agitation or representations from the handloom weavers as such. But after experience and also after working one or two pilot schemes and also after studying the conditions prevailing in our neighbouring States and in our country, and also after the decision of the Government of India to push ahead with the power-looms, we found that if we did not agree to go in for power-looms, we would be put to a great loss.